பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 16 (29—6—68) சனி ★ வெளியூர்: ஆனி 17 (30—6—68) ஞாயிறு [இதழ்: 13

கடனை அடைக்க வாங்கும் புதுக் கடன்!

இந்தியாவுக்குப் பிரிட்டன், ரூ. 28.8-கோடி கடனுதவும் இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. ஒரு கடன், பொதுப் பணிகளுக்கும்; மற்றொரு கடன், உதவிக் குழு நாடுகளுக்கு இந்தியா திருப்பித் தரவேண்டிய கடன்களைத் திருப்பித் தருவதற்கும் பயன்படும்.

திட்டக் குழுவின் அவலக் குரல்!

இலட்சிய அளவுக்கு எதுவுமே நிறைவேறவில்லையாம்

ஏற்றுமதி அளவும் குறைந்துவிட்டதாம்

புதுடில்லி, சூன் 29—

"சென்ற ஆண்டுத் திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட முக்கிய இலட்சிய அளவுகளில் எதுவுமே நிறைவேறவில்லை" என்று திட்டக் குழு கண்டுபிடித்திருக்கிறது.

சென்ற ஆண்டில் இலட்சிய அளவுகள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் திட்டக் குழு பரிசீலனை செய்து பின்வருமாறு தெரிவித்துள்ளது:—

தேசிய வருமானம் 12 சதவிகிதம் உயரவேண்டும்; ஆனால் 9 சதவிகிதமே அதிகரித்தது. தொழில்துறை, விவசாயத்துறை ஆகியவற்றின் இலட்சிய அளவுகள் சரிவர நிறைவுபெறாமல் இருந்துவந்ததே இந்த நிலைமைக்குக் காரணம்.

95 இலட்சம் டன் உணவுத் தானியமே சென்ற ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டது.

100 இலட்சம் டன் உணவுத் தானியம் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதுதான் இலட்சிய அளவு

இன்னும் இறுதியான புள்ளிவிவரம் கிடைக்கவில்லை என்றாலும், 100 இலட்சம டன் உணவுத் தானியம் உற்பத்தியாகி இருக்கவேண்டும் என்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் நம்புகின்றனராம்.

1967—68-ல் ஏற்றுமதிகளும் மனநிறைவளிக்கக் கூடியவையாக இல்லை. ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 1,275 கோடி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் ரூ. 11,97 கோடி மதிப்புக்குத்தான் ஏற்றுமதி நடைபெற்றது.

தூற்றியவர்களையும் போற்றுவோம்!

இலஞ்சி, சூன் 29—

"இந்தச் சிற்றூர் (இலஞ்சி) அரசியல் வரலாற்றில் புகழ்பெற்ற ஊர்; நீதிக் கட்சிக்கு அரணாக இருந்த ஊர்; இந்த ஊரில் தி. மு. கழக வேட்பாளருக்கு வாக்குக் கேட்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

"இங்குள்ள பெரிய மனிதர்கள் கட்சி மாறியிருக்கலாம்; ஆனால் எங்கள்மீது அவர்கள் கொண்டிருக்கும் மதிப்பு மாறவில்லை!

"என்னைப்பற்றியும், கழகத்தவர் பற்றியும் காங்கிரசார் தரக்குறைவாகப் பேசுவதாக நண்பர்கள் சொன்னார்கள். அவர்கள் பேசுவதுபற்றி நாம் கோபம் கொள்ளவோ, கவலையடையவோ கூடாது!

"கடந்த 35-ஆண்டுகளாக இத்தகைய ஏச்சுக்கும் பேச்சுக்[கும்] மத்தியில்தான் நாம் [வள]ர்ந்து வந்தோம்! அந்த [ஏ]ச்சும் பேச்சும்தான், ம[க்க]ள் [உ]ள்ளத்தில் நீங்காத இடத்தை நமக்குப் பிடித்துக் கொடுத்தன!

"யார் என்ன சொன்னபோதிலும் நான் அவர்களைப் பாராட்டுவேனே தவிர அதற்காக இழிவாகப் பேசமாட்டேன் — தரக்குறைவாகவும் பேசமாட்டேன்!"

—அறிஞர் அண்ணா

(தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

விலைகளை ஏற்றியவர்களுக்கா உங்கள் வாக்கு?

தப்புக்கணக்கு போட்டவர்களின் தரக்குறைவான பேச்சு

'அவர்களெல்லாம் நல்லவர்கள் — நம்மவர்கள் எனபதே எங்க[ள் கருத்து] [illegible]

தென்காசித் [illegible] தில் நடந்த [illegible] டத்தில் அ[illegible] தாவது:—

"இந்த இ[illegible] சாரக் கூட்டங்க[illegible] ஒரு காங்கிரசுக்கா[illegible] அண்ணாதுரை ஆட்சியில் இந்த அநியாயம் — அக்கிரமம் நடந்தது' என்று கூறவில்லை!

"அவர்கள், இன்னென்றையும் பேசவில்லை; அதாவது, 'காங்கிரசுக் கட்சி நடத்தும் டெல்லி அரசில் கார்டு விலை ஏறிற்று—கவர் விலை ஏறிற்று—இரயில் கட்டணம் உயர்நதது என்பதையெல்லாம் குறிப்பிட்டுப் பேசவில்லை!

"மத்திய எக்சைஸ் வரி ஏறியதால் ஆலைகளை மூடினார்களே —அதைப் பற்றியும் வாய்திறக்கவில்லை!

"அவர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி விலையை ஏற்றினார்கள்—நாங்கள், விலை[illegible]த்தோம்; பஸ் கட்ட[ணத்தைக் கு]றைத்தோம்!

[illegible]த்தில் உள்ளவர்களைக் [கேட்கி]றேன்—யாருக்கு உங்கள் வாக்கு?

"விலையைக் குறைத்த உதயசூரியனுக்கா?—விலையை ஏற்றிய அவர்களுக்கா?

"காங்கிரசுக்காரர்கள் எப்போதுமே தவறான கணக்குத்தான் போடுவார்கள்! தி. மு. க. பற்றிக் காங்கிரசுக்காரர்கள் பேசும் போதெல்லாம், 'தி. மு. கழகத்தினர் அற்பர்கள்; எதற்கும் இலாயக்கற்றவர்கள்' என்று கருதித்தான் பேசுவார்கள்!

"நாங்களோ, அவர்களை, 'நல்லவர்கள்—நம்மவர்கள்' என்றே இதுவரை கருதி வந்தோம்! இனியும் அப்படியே கருதுவோம்!"

தென்காசி வாக்காளர்களே—சிந்திப்பீர்!

இருபதாண்டுக் காங்கிரசு சாதனை என்ன?

எங்கள் பதினைந்து மாதச் சாதனைகளை ஒப்பிட்டுப் பாரீர்!

தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா வேண்டுகோள்

தென்காசி, சூன் 28—

"இருபதாண்டுக் காலம் ஆட்சி செலுத்தினார்கள்—மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டார்கள்—பலன் ஏதேனும் ஏற்பட்டதா? வறுமை ஒழிந்ததா? வாட்டம் போயிற்றா? இல்லாமை நீங்கியதா?

"மக்கள் பல்லைக் கடித்துக்கொண்டு வயிற்றைக் கையிலே பிடித்துக்கொண்டு, பொறுமையோடு பல ஆண்டுகள் கழித்துவந்தார்கள்; 'அறுபத்தேழு' தேர்தல் வந்தது; காங்கிரசைத் தூக்கியெறிந்தார்கள்! இன்று எங்களை ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள்!

"நாங்கள் பொறுப்பேற்று 15 மாதங்கள் ஆகின்றன; இருபதாண்டுக் காங்கிரசுச் சாதனையையும் எங்கள் சாதனையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்; எங்கள் சாதனை உங்களுக்கு மன நிறைவு அளிக்கவில்லை என்றால் எங்களையும் தூக்கியெறியுங்கள்!"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், தென்காசித் தொகுதியில் உள்ள இலஞ்சி என்ற ஊரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்கள். தொடர்ந்து பேசுகையில் அவர் விளக்கியதாவது:—

"சில இடங்களில் பானை தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டேன்; அந்தப் பானை சொல்லும் பாடம் என்ன? 'காங்கிரசு ஆட்சியில் காலியாக இருந்தேன்; இப்போது நிரம்பி வழிகிறேன்' என்று சொல்லுகிறது!

'காங்கிரசு ஆட்சியில் அரிசிக் கடை இருந்தது; கடைக்காரர் இருந்தார்; படி இருந்தது; ஆனால் அரிசி மட்டும் இல்லை! இப்போது, 'அரிசி கிடைக்கவில்லை' என்று யாராவது சொல்கிறார்களா? ரேஷன் கடைக்குச் சென்று அரிசி வாங்காமல் திரும்பி வந்தவர்கள் உண்டா?

"நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு விலைகள் குறைந்துவிட்டன —மேலும் மேலும் குறையும்! இது காங்கிரசாருக்குப் பொறுக்கவில்லை! புரியாத பொருளாதாரம் பேசுகிறார்கள்!

"விலைகள் குறைந்ததால் மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்; 'மேலும் குறையாதா' என்று எதிர்பார்க்கிறார்கள்! ஆனால் காங்கிரசாரோ வேதனை அடைகிறார்கள் — ஆத்திரப்படுகிறார்கள்!

'கழகத்திற்கு ஓட்டுப் போட்டால், 'மாநிலத்திற்கு அதிக அதி[காரம்] தேவை' என்று பொருள்! காங்கிரசுக்குப் [போட்டால்], 'குவிந்து கிடக்கிற அதிகாரம் டில்லியிலே [கு]வியவேண்டும்' என்று பொருள்!"

அமெரிக்க நீக்ரோ தலைவர்

சிறையில் உண்ணாநோன்பு

வாஷிங்டன், சூன் 29—

அமெரிக்க நீக்ரோ மக்களின் குடியுரிமை இயக்கத் தலைவர் ஆபெர்நாட்டி, சிறையில் உண்ணாநோன்பு துவங்கியுள்ளார்.

"அமெரிக்க ஏழைகளின் துயரைத் துடைப்பதில் அரசைக் கவனம் செலுத்தும்படி செய்வதே என்னுடைய உண்ணாநோன்பின் நோக்கமாகும்"

என்று இருபதுநாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அவர் கூறியிருக்கிறார். மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"அமெரிக்காவில் மூன்று கோடி மக்கள் வறுமையில் ஆழ்ந்துள்ளனர். அவர்களது நிலைமை மேம்படுவதற்கு அனைத்தையும் செய்தாக வேண்டும்."

பதவி விலகத் தயார்— படி அரிசி போடுவீர்களா?

காங்கிரசாருக்கு அண்ணா அறைகூவல்

"காங்கிரசார் என்னோடு ஒத்துழைத்து —மொரார்ஜி தேசாயுடன் போராடி — நிதியுதவி பெறத் தயார் என்றால், தமிழகம் முழுவதிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிறோம்.

"'தமிழகம் முழுவதிலும் படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்தத் தயார்' என்று சுப்பிரமணியம் கையெழுத்துப் போட்டு என்னிடம் கொடுக்கத் தயார் என்றால், பத்திரத்தைக் கொடுத்த 24 மணி நேரத்தில் நாங்கள் பதவியை விட்டு விலகத் தயார்!

"அவர்களை அமைச்சர்களாக்கி, முதல் மாலையை நானே சூட்டுவேன். இந்த அறைகூவலை காங்கிரசார் ஏற்கத் தயாரா?"

(புளியரை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

இலங்கை தமிழர்களுக்கு மற்றொரு பேரிடி!

சிங்களத்தில் பயிற்சித்திறன் பெருத அரசு ஊழியர்களுக்கு நேரிடும் அவதி

3000 பேருக்கு ஊதிய உயர்வு நிறுத்தம்?

தமிழர் தலைவர்களின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, சூன் 29—

இலங்கையின் ஆட்சி மொழியான சிங்களத்தில் பயிற்சி—திறமை பெறுவதற்கு அரசுப் பணியிலுள்ள தமிழர்களுக்குத் தரப்பட்டிருந்த மூன்றுண்டுக்காலக் கெடுவை 'நீடிக்க இயலாது' என்ற இலங்கை அரசின் முடிவு, சுமார் 3,000 தமிழ் அதிகாரிகளைப் பாதிக்கும் அவலநிலை உருவாகியிருக்கிறது. இந்தக் காலக்கெடு, சூன் 30-ஆம் நாளுடன் முடிவடைகிறது.

1965 சூலைத் திங்களில் தமிழ் அதிகாரிகள், சிங்களம் கற்றுக் கொள்ள மூன்றுண்டுக்கால அவகாசம் தரப்பட்டது.

தலைமையமைச்சர் டட்லி சேனநாயகா, நிருபர்கள் மாநாட்டில், 'சிங்கள மொழியில் திறனெய்துவதற்கான அவகாசம் சூன் 30-ம் நாளுக்குமேல் எவ்விதத்திலும் நீடிக்கப்படமாட்டாது' என்று அறிவித்தார்.

மூன்றுண்டுக்காலக் கெடுவுக்குள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறத் தவறினல், அரசின் முடிவுக்கிணங்க தமிழ் அதிகாரிகளின் ஊதிய உயர்வுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்; அல்லது நிறுத்தப்பட்டுவிடும்.

சிங்களத் தேர்ச்சிக்கான கெடுவை இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்குமாறு தலைமையமைச்சரிடம் வற்புறுத்திக் கோருவதென தமிழர் கட்சிகளின் தலைவர் முடிவு செய்துள்ளனர்.

ஆனல் நிருபர்கள் கூட்டத்தில், 'எவ்வளவு அரசியல் நிர்ப்பந்தத்தைக் கொணர்ந்தாலும் கெடு நீடிக்கப்படமாட்டாது' என்று தலைமையமைச்சர் டட்லி சேனநாயகா கூறிவிட்டார்.

குறிப்புக்கள்கூடச் சிங்கள மொழியில்தானும்!

தகராறுக்குரிய மாவட்டக் குழுக்கள் மசோதா பற்றித் தலைமையமைச்சர் கூறியிருப்பதாவது:—

"நாட்டின் மொழிச் சட்டங்களுக்கு இணக்கமாக மாவட்டக் குழுக்கள் மசோதா அமையும். தமிழ் வழங்கும் பகுதிகளில் கூட, மாவட்டக் குழுக்களின் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள், ஆட்சிமொழியான சிங்களத்திலேயே இருக்கும்.

மசோதா பற்றிக் கூறப்படும் குறைகளைக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது:—

"உக்தேச மசோதாவில் எந்தப் பிரிவு ஆட்சேபகரமானது என்பதை எவரும் இதுவரையில் திட்டவட்டமாக சொல்லவில்லை.

"மாவட்டக் குழுக்கள் அமைந்த பிறகு எந்தச் சிங்களவரும் தமிழ் வழங்கும் வடக்கத்தி மாகாணங்களுக்கும், கிழக்கத்தி மாகாணங்களுக்கும் செல்ல முடியாதென்று சொல்லுவது ஆச்சரியத்திற்குரிய ஒன்றாகும்."

★

தமிழர்களை இழிவுபடுத்தும் சிங்கள வெறிச் செயல்

வெளிநாடுகளில் இலங்கை விஷமத்தனமான விளம்பரம்!

தோட்டப் பெண் தொழிலாளர் தலைவி குமுறல்

கொழும்பு, சூன் 28—

"இனம், மொழி அடிப்படையில் இலங்கையிலுள்ள தமிழர்கள் ஒடுக்கப்பட்டு வருகிறார்கள்!

"தமிழர்களை, 'கறுப்பர்' என்று அழைப்பது, இலங்கை போன்ற பௌத்த நாட்டுக்கு அடுக்காத ஒன்றாகும்.

"வெளிநாடுகளில், இலங்கையின் சுற்றுலா வளர்ச்சித் துறை வெளியிட்டுள்ள விளம்பரம், நிற வேற்றுமை—இன ஒதுக்கல் முறைகளைப் பின்பற்றுவதற்கு முதற்படியாக இருக்கிறது"

என்று, இலங்கைத் தோட்டத் தமிழ்ப் பெண்கள் சம்மேளனத் தலைவியார் சிவபாக்கியம் குமாரவேலு, மனங்குமுறிக் கூறியிருக்கிறார்; 'தென்னாப்பிரிக்காவைப் போல், நிற வேற்றுமை—இன ஒதுக்கல் முறைகளைக் கொண்டு வருவதற்கான முன்னோட்ட நடவடிக்கையாக இருக்கிறது இச்செயல்' என்றும் அவர் மனம் வெதும்பிக் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் உல்லாசப் பயணத்தை ஊக்குவிக்கும் அளவில், பிரிட்டனில், இலங்கையின் 'உலா'த் துறை வெளியிட்டுள்ள விளம்பரம் ஒன்று, இலங்கைத் தமிழர்களிடையில் மனக்கசப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

"ஆடையாபரணங்கள் அணிந்த சிங்கள அழகிகளையும், 'கறுப்பு'த் தமிழர்களையும் காண்பதற்கு இலங்கை வாரீர்"

என்று அழைக்கிறது — அந்த சுற்றுலாத் துறை விளம்பரம்!

இதுபற்றித் தலைமையமைச்சருடனும், அமைச்சர் ஜெயவர்த்தனவுடனும் பேசத் தமிழர் தலைவர்கள் முயற்சித்துவருகின்றனர்.

பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை

உ. பி. மாநிலத்தில் ஏற்படுத்த அனுமதி

லக்னோ, சூன் 29—

உத்தரப் பிரதேசத்தில் ரூ. 60 கோடி செலவில், வெளிநாட்டு ஒத்துழைப்புடன் பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை ஒன்றை நிறுவத் தனியார் துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது.

இத்தொழிற்சாலை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கிடைத்துவிட்டது.

மாநில அரசு, இத்தொழிற்சாலைக்கான இடம் அளிப்பதுடன் ஏனைய வசதிகளையும் செய்து கொடுக்க முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆசிரியர்கள் தொகை உயருகிறது!

பள்ளிகளுக்குத் தமிழக அரசு அனுமதி

சென்னை, சூன் 28—

தமிழ்நாட்டில் 1,720 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிக்கத் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

துவக்கப் பள்ளிகளில் மேலும் ஒன்றரை இலட்சம் மாணவர்களைச் சேர்க்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதால் மேலும் துவக்கப் பள்ளி ஆசிரியர்களை நியமிக்க அரசு வகை செய்துள்ளது.

ஆனல், மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்குள் அடங்கும்படியாகவே ஆசிரியர்கள் நியமனச் செலவு இருக்கவேண்டும்.

இரு மொழிக் கொள்கைக்கு எடுத்துக் காட்டாகக் காஷ்மீர்!

சென்னை, சூன் 27—

"தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூடிய மாநிலமான காஷ்மீரே இரு மொழித் திட்டத்துக்கு ஒரு சான்றாகத் திகழ்கிறது"

என்று, அமைச்சர் மாதவன் கூறினார்.

ஸ்ரீநகரில் நடந்த ஒருமைப்பாட்டுக் குழு மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு வந்த திரு. மாதவன் இதனை விளக்கிக் கூறுகையில் குறிப்பிட்டதாவது:—

"காஷ்மீரில் இந்திக்கு இடமே இல்லை; எந்த இடத்திலும் ஒரு பெயர்ப் பலகைகூட இந்தியில் இல்லை; எல்லாப் பெயர்ப் பலகைகளிலும் உருது அல்லது ஆங்கிலம் அல்லது இரு மொழிகளிலும்தான் எழுதப்பட்டிருக்கிறது.

வலிமையுடன் உரிமையை நிலைநாட்டிவிட்டனர்!

"அங்கு வலிமையோடு அந்த உரிமையை அவர்கள் நிலைநாட்டிவிட்டார்கள்; இங்கு அந்த உரிமையை நாம் பணிவோடு நிலைநாட்ட வேண்டியுள்ளது!"

'மேலாதிக்கம் படைத்த திட்டக் குழு கூடாது'

'அந்தந்த மாநிலங்களிலேயே திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்'

துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி கருத்து

பெங்களூர், சூன் 27—

"நாடு முழுவதற்கும் ஒரே இடத்தில் திட்டம் தயாரிக்கும் மத்திய திட்டமிடும் முறை மாற்றப்பட வேண்டும்; திட்டத் தயாரிப்பும், நடைமுறைப்படுத்துவதும் மாநில மட்டத்தில் நடைபெற வேண்டும்.

"திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமானல், அரசின் திட்டங்களாக மட்டுமன்றி, மக்களின் திட்டங்களாகவும் இருக்க வேண்டும்.

"சனநாயக அமைப்பில் மக்களை ஊக்குவித்து, பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளிலும் அவர்கள் தீவிர கவனம் எடுத்துக் கொள்ளும்படிச் செய்வதும், அவர்களின் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவதும் நமது முக்கியப் பொறுப்பாகும்; 'திட்டங்கள் தங்கள் நலனுக்காகவே' என்பதை அவர்கள் உணரும்படிச் செய்யவேண்டும்"

என்று துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, பெங்களூர் நகர மக்கள் அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் வலியுறுத்தினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மாநிலத் திட்டக் குழுக்கள் அமைப்பது உருப்படியான திட்டங்களைத் தயாரிக்க உதவி செய்யும் என்பது மட்டுமன்றி, 'பல்வேறு துறைகளில் திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன' என்பதை உன்னிப்புடன் கவனித்து வரவும் உதவி செய்யும்.

"திட்ட போர்டு முற்றிலும் ஆலோசனை கூறும் குழுவாக இருக்கவேண்டும். அமைச்சரவைக்கு மேற்பட்ட ஒரு குழுவைப்போல் அது நடந்து கொள்ளக்கூடாது."

கொள்முதல் செய்த கோதுமை தேக்கம்!

எடுத்துச்செல்ல ராணுவ உதவி

பஞ்சாபில் தேங்கியுள்ள கோதுமையை எடுத்துச் செல்வதற்காக இராணுவத்தின் உதவி நாடப்பட்டது.

மண்டிகளிலும், ஏனைய இடங்களிலும் இருப்பில் உள்ள கோதுமை, மழை வந்தால் நனைந்து வீணகிவிடும் என்பதால் இராணுவத்தின் உதவி தேவைப்பட்டது. மாநிலத்தின் சில பகுதிகளில் பருவமழை தொடங்கிவிட்டது.

பஞ்சாபும் அரியானவும் சேர்ந்து ரூ 85 கோடி மதிப்புக்குக் கோதுமை கொள்முதல் செய்தன. இவ்வாண்டு அறுவடைக்குப் பின், கோதுமை ஏராளமாக சந்தைக்கு வந்துள்ளது.

'தண்டி யாத்திரை' நினைவுச் சின்னம்!

காந்தி நூற்றாண்டு விழாக் குழு ஏற்பாடு

இராசகோட்டை, சூன் 27—

ஆமதாபாத்தில் காந்தியார் வாழ்ந்த சபர்மதி ஆசிரமத்தையும், 1930-ல் அங்கிருந்து காந்தியார் உப்புச் சத்தியாக்கிரகம் செய்யச் சென்ற 'தண்டி' என்னும் சிற்றூரையும் இணைக்கும் வகையில் 241 மைல் தொலைவுள்ள சாலை ஒன்றை, அமைக்கும் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன! காந்தியாரின் நினைவுச் சின்னமாக இந்தச் சாலை விளங்கும்!

காந்தியாரும் அவருடைய தொண்டர்கள் 80 பேரும் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டிக்குக் கால்நடையாகப் பயணம் செய்தபோது, இடையிலே முகாம் செய்த 14 இடங்களிலும் 14 சலவைக் கற்களாலான நினைவுச் சின்னங்கள் கட்டப்படும். ஒவ்வொரு சின்னத்திலும், தண்டி யாத்திரை முகாம் பற்றிய விவரங்களும், காந்தியாரின் பொன்மொழிகளும் பொறிக்கப்படும்.

காந்தி நூற்றாண்டு விழாக் குழுவினர் இந்த ஏற்பாட்டினைச் செய்துவருகின்றனர்.

காந்தி நூற்றாண்டு விழாவின் போது குசராத் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள், சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டிக்கு காந்தியார் சென்ற வழியே நடந்து செல்வர். நூற்றாண்டு விழாவில் இதுவும் ஒரு நிகழ்ச்சியாகும்.

ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலிருந்தும் ஒரு மாணவனும், ஒரு மாணவியும் 1969 மார்ச் 11-ஆம் நாள் வந்து ஆசிரமத்தில் கூடுவர். மார்ச் 12-ஆம் நாள் பயணம் தொடங்கும்.

இந்த நாளில்தான் காந்தியார், தண்டி யாத்திரை புறப்பட்டார். காந்தியாரும் தொண்டர்களும், தடைமீறி உப்புக் காய்ச்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட நாளான ஏப்ரல் 6-ஆம் நாள் இந்த மாணவ மாணவியர், தண்டியை அ[illegible]

குசராத் பல்கலைக் கழ[illegible] வேந்தரான திரு. உ[illegible] சேனபதி இது பற்றிக் குறிப்[illegible]யில், காந்திக்கு மரியாதை செ[illegible]தவும், காந்தீய உணர்வை மீண்டும் பெறவுமான வகையில் இந்தப் பயணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும், இந்த நிகழ்ச்சியை, மேலைநாடுகளில் நடக்கும் நினைவு அணிவகுப்புகளைப் போல் ஆண்டுதோறும் நடத்தலாம் என்று தாம் விரும்புவதாகவும் கூறினர்.

ஆமதாபாத் — தண்டி சாலை அமைக்கும் பணி பெரும்பகுதி முடிந்துவிட்டது.

இராம[illegible]போட்டுக்கு அர[illegible]பம்

374-ஒன்றிய[illegible]175-இலட்சம்!

சென்னை, சூன் 28—

1968-69-ல், ஊராட்சிகள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மானிய உதவியாக 374-ஒன்றியங்களுக்குச் சுமார் ரூ. 175-இலட்சம் அரசு வழங்கியது.

மத்திய-மாநில அரசுகளிடமிருந்து கிடைக்கும் மானியத் தொகை இது; ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்துக்கும் சமமாக இம்மானியத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

ஒவ்வொரு ஒன்றியமும், சமூக-கல்விச் செலவை (செய்தித் தாள்கள் வாங்கியளித்தல்) ரூ. 2,000 ஆகவும், இணைப்புச் சாலைகள் அமைக்கும் செலவை ரூ. 16,100 ஆகவும், சாதாரண கிணறு வேலைகள் செலவை ரூ. 14,800-ஆகவும், குழாய் நீர் வழங்கும் செலவை ரூ. 10,750-ஆகவும், பள்ளிக் கட்டிடங்கள் செலவை ரூ. 7,600-ஆகவும், விவசாயத் திட்டச் செலவை ரூ. 1,800-ஆகவும், கால்நடைப் பராமரிப்புச் செலவை ரூ. 6,100-ஆகவும் கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

"கிராம வளர்ச்சி வேலை மானியத்தின் கீழ் ஒதுக்கப்படும் தொகை 20-சதவிகிதத்தைத் தாழ்த்தப்பட்டோர் நலனுக்கான வேலைகளை மட்டும் மேற்கொள்ளப் பயன்படுத்த வேண்டும்" என்று அரசு கூறியிருக்கிறது.

தமிழக மின் குழு

செங்கற்பட்டு மின் பெருவட்டம்

டெண்டர் அறிக்கை

கீழ்க்காணும் பொருள்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பங்கள் (Tenders) அடியிற் கையொப்பமிட்டவரால் செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் இரயில்வே சாலையிலுள்ள அவரது அலுவலகத்தில் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 3-மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருள்களின் விவரம்	முடிவு நாள்
1.	எஸ்இசி/டி. 11/68-69	அரை அங்குல விட்டமுள்ள மணிலா கயிறு (சுமார் ஒன்றரை அங்குலம் சுற்றளவு கொண்டது)	15—7—68
2	எஸ்இசி/டி. 12/68-69	முக்கால் அங்குல விட்ட முள்ளமணிலாகயிறு(சுமார் இரண்டேகால் அங்குலம் சுற்றளவு கொண்டது)	15—7—68
3.	எஸ்இசி/டி. 13/68-69	ஆர். சி. சி. கம்ப பேக் கிளாம்ப் சாதாரண வகை (RCC. Pole Back Clamp ordinary)	16—7—68
4.	எஸ்இசி/டி. 14/68-69	ஆர். சி. சி. கம்ப பேக் கிளாம்ப் ஸ்பெஷல் (RCC. Pole Back Clamp Special)	16—7—68
5.	எஸ்இசி/டி. 15/68-69	ஆர். சி. சி. கம்ப ஸ்டே கிளாம்ப் சாதாரண வகை (RCC. Pole Stay Clamp ordinary)	16—7—68
6.	எஸ்இசி/டி. 16/68-69	ஆர். சி. சி. கம்ப ஸ்டே கிளாம்ப் ஸ்பெஷல் (RCC. Pole Stay Clamp Special)	16—7—68
7.	எஸ்இசி/டி. 17/68-69	"B" மாடல் பெட்டி செய்தல் ("B" type Box)	12—7—68
8.	எஸ்இசி/டி. 18/68-69	அறுகோணத்தலை உள்ள போல்ட்டும் நட்டும். எம் எஸ் 3"×5/8" (75 மி மீ.× 16 மி மீ)	18—7—68
9.	எஸ்இசி/டி. 19/68-69	ஷை 3½"×5/8" (87 மி.மீ.× 16 மி.மீ.)	18—7—68
10	எஸ்இசி/டி. 20/68-69	ஷை 4"&4½" × 5/8" (100 மி. மீ. & 112 மி. மீ. × 16 மி. மீ)	18—7—68
11.	எஸ்இசி/டி. 21/68-69	ஷை 5"×5/8" (125 மி.மீ. × 16 மி.மீ.)	18—7—68
12.	எஸ்இசி/டி. 22/68-69	ஷை 6", 8", 9' & 10' × 5/8" (150 மி.மீ , 200 மி.மீ., 225 மி மீ. & 250 மி. மீ. × 16 மி.மீ.)	18—7—68
13.	எஸ்இசி/டி. 23/68-69	ஷை 1", 1½", 2' & 2½" × 3/8' (25 மி.மீ., 37 மி மீ., 50 மி. மீ. & 62 மி மீ × 10 மி.மீ) & 1½" 2" & 2 3/4" ×5/8" 37 மி.மீ. 50 மி.மீ. & 68 மி.மீ.×16 மி.மீ)	19—7—68
14.	எஸ்இசி/டி. 24/68-69	அறுகோணத்தலை உள்ள போல்ட்டும் நட்டும். ஜி. ஐ 1", 1½" & 2" × 3/8" (25 மி.மீ. 37 மி. மீ. & 50 மி. மீ. ×10 மி. மீ.)	19—7—68
15.	எஸ்இசி/டி. 25/68-69	சதுரத்தலை உள்ள போல்ட்டும் நட்டும். ஜி. ஐ. 4½" × ½" (112 மி.மீ. × 12 மி.மீ.)	19—7—68
16.	எஸ்இசி/டி. 26/68-69	எம்.எஸ். வாஷர்கள் 5/8" & 3/8" (16 மி.மீ. & 10 மி.மீ.	19—7—68
17.	எஸ்இசி/டி. 27/68-69	2'×20 வாட் குழல் விளக்குகளுக்கான தெரு விளக்கு பிட்டிங்குகள்	20—7—68
18.	எஸ்இசி/டி. 28/68-69	குழல் விளக்குகளுக்கான 20 வாட் சோக்குகள்	20—7—68
19.	எஸ்இசி/டி. 29/68-69	குழல் விளக்குகளுக்கா[illegible] 40 வாட் ஸ்டார்டர்க[illegible] சோக்குகள்	[illegible]
20.	எஸ்இசி/டி. 30/68-69	குழல் விளக்[illegible] 20 வாட் ஸ்டார்[illegible]	[illegible]
21.	எஸ்இசி/டி. 31/68-69	அலுமினியம் பெ[illegible]	[illegible]
22.	எஸ்இசி/டி. 32/68-69	ஆன்ட்டி கரோசிவ் [illegible] பெயின்ட்	[illegible]
23.	எஸ்இசி/டி. 33/68-69	ரெட் ஆக்ஸைட் ப்ரைமர்	11—7—68
24.	எஸ்இசி/டி. 34/68-69	ஜின்க் குரோமேட் ப்ரைமர்	11—7—68
25.	எஸ்இசி/டி. 35/68-69	ப்யூஸ் யூனிட் 15 A 500 V	23—7—68
[illegible]	எஸ்இசி/டி. 36/68-69	ஷை 30 A 500 V	23—7—68
[illegible]	எஸ்இசி/டி. 37/68-69	ஷை 100 A 500 V	23—7—68
[illegible]	எஸ்இசி/டி. 38/68-69	ஷை 200 A 500 V	23—7—68
29.	எஸ்இசி/டி. 39/68-69	கட்-அவுட் 100 A 500 V	23—7—68
30.	எஸ்இசி/டி. 40/68-69	எல்.டி. ஷாக்கிள் ஹார்டுவேர்	15—7—68

டெண்டர் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5 15 (விற்பனை வரி உட்பட) ஆகும்.

மேற்படி டெண்டர் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Tender Specification Copies) வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூ. 5.15 வீதம், 'தலைமைக் கணக்கர் (செலவுப் பிரிவு), செங்கற்பட்டு மின் பெருவட்டம் (Chief Accountant/Expr. Chingleput Elecy. System), இரயில்வே சாலை, காஞ்சிபுரம்' என்ற முகவரிக்குப் பண அஞ்சல் (Money Order) அல்லது டிமான்ட் டிராப்ட் (Demand Draft) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி, அவற்றை [illegible]ந் தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்படி [illegible]க்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

[illegible]தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது [illegible]வரி[illegible]யையும், தேவையான பிரதிக்குரிய சாற்றுக் குறிப்பு எண்ணை [illegible] (Specification Number) தெளிவாகக் குறிப்பிடவேண்டும்

பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சேர்ப்பிக்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத விலை ஒப்பங்களும் குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

விலை ஒப்பங்கள் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 3-30 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பங்களையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பதாரர்களுக்கிடையே ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

சூப்பரின்டென்டிங் எஞ்சினியர்,
செங்கற்பட்டு மின் பெருவட்டம், காஞ்சிபுரம்

ம.பொ.சிவஞானத்தின் தூய தொண்டு

அமைச்சர் முத்துசாமி பாராட்டு

"எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அந்தக் கட்சியின் தூய தொண்டர்களை— நாட்டுக்கும், மொழிக்கும் தொண்டாற்றுபவர்களைப் பாராட்ட வேண்டும். இல்லையென்றால் எந்தச் சமுதாயமும் முன்னேற முடியாது"

என்று, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள், பாலர் அரங்கில் நடைபெற்ற ம பொ. சிவஞானம் 63-வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

"ம. பொ. சி. அவர்கள், நாட்டுக்காக—மொழிக்காக ஆற்றிய தொண்டுகள் சொல்லித்தான் தெரியவேண்டுமென்ற நிலையில் இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சி

விழாவிற்கு குப்புசாமி தலைமை தாங்கினார்.

ம. பொ. சி-யை வாழ்த்தி கம்யூனிஸ்டுத் தலைவர் கல்யாணசுந்தரம், முத்தையா, அப்துல் சமது எம் பி., டி. கே. சண்முகம் எம். எல்.சி., டாக்டர் சந்தோஷம், கு சா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் பேசினர்.

வ. ஆ. மாவட்ட நகர தி. மு. க. கிளைத் தேர்தல்கள்

7--7--68 அன்று நடைபெறும்

அரக்கோணம்
ஆற்காடு
இராணிப்பேட்டை
ஆரணி
வாலாசா

ஆகிய நகரக் கிளைகளின் தேர்தல்கள், மாவட்டச் செயலாளரால் அனுப்பிவைக்கப்படும் ஆணையாளர்களின் தலைமையில் நடைபெறும்.

— தலைமைக் கழகம் (தி.மு.க.)

தாராபுரம் நகர தி. மு. க. தேர்தல்

கோவை மாவட்டம் தாராபுரம் நகர தி. மு. க. கிளைத் தேர்தல், 7—7—68-ல், மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் விசயமங்கலம் தோழர் வி. வி. இராமு தலை[illegible]நடைபெறும்.

[illegible]க் கழகம் (தி.மு.க.)

இராசபாளையம் மாநாட்டில் சோஷலிச விரோதி!

வேடத்தை மாற்றுகிறது காங்கிரசுக் [illegible]சி

ம. பொ. சிவஞானம் விளக்கம்

சென்னை, ஜுன் 29—

"சோஷலிசத்தின் எதிரி என்று மொரார்ஜி தேசாயைப் பற்றி கே. டி. மாளவியா கூறினார். அப்படிப்பட்டவர், சோஷலிசத்தைப் பேசும் காமராசர் கூட்டிய காங்கிரசு மாநாட்டுக்கு வருகை தருகிறார்—இதுதான் சோசலிசத்தின் இலட்சணமா? மக்கள்மீது வரிச் சுமை ஏற்றிய தனவான், இராசபாளையத்தில் காங்கிரசு மாநாட்டில் மேடை ஏறியிருக்கிறார்!

" அந்த மாநாட்டில் 'சேலத்தில் இரும்பாலை வேண்டும்' என்றோ, 'சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும்' என்றோ —தீர்மானங்கள் போட்டார்களா என்றால் இல்லை! ஆக்க வழித் தீர்மானம் ஒன்றுகூட இல்லை! 'சகுனிமாமா' பேச்சுத் தான் மாநாட்டில் பேசப்பட வேண்டுமா?"

என்று தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் வினவினார்.

பாலர் அரங்கில் நடந்த அவரது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு பாராட்டியவர்கட்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

தீமை மேலும் தொடருவதா?

'என் தொகுதியில் பயங்கரமான தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன; 'இந்தத் தீமைகளுக்கெல்லாம் முடிவு வராதா?' என்று ஏங்க வேண்டியிருக்கிறது!

ஏழை மக்களின் குடிசைகளுக்குத்தானா இப்படிப்பட்ட தீமைகள் தொடரவேண்டும்? தொத்து நோயான காலராவும், அம்மையும் குடிசைகளை நோக்கித்தான் வருகின்றன; வெள்ளம் வந்தாலும் குடிசைகளை நோக்கித்தான் பாய்கிறது; அரசியல் காழ்ப்பு உள்ளவர்கள் தீப்பந்தம் பிடித்துக்கொண்டும், 'பாஸ்பரஸ்' எடுத்துக்கொண்டும் செல்வது குடிசைகளை நோக்கித்தான்; இந்தத் தீமைகள் ஒழிந்தால் தான் நாட்டுக்கு நன்மை ஏற்படும்.

நடக்கட்டும் அந்தப் பணி!

காங்கிரசார் இப்போது விவசாயிகள் கட்சி ஆரம்பிக்கிறார்கள் என்றால், இதுவரை அது மிராசுதாரர் கட்சியா?

ஆட்சிக்கு எதிராக விவசாயிகளைத் தூண்டுவதானால், மிராசுதாரர்கள் தலைமையில் அது இயங்க இயலாது என்பதால் தான், தனி அமைப்பை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்!

உழவர்களுக்கு விழிப்புணர்ச்சியை உண்டாக்க முயற்சி எடுத்துக்கொள்ளுவது நல்லது தான்! அவர்கள் விழிப்புப் பெற்றால், காங்கிரசுக்காரர்களைத்தான் முதலில் பார்ப்பார்கள்! நடக்கட்டும் அந்த நல்ல பணி!

தடைகளைத் தாண்டித்தான் செல்லவேண்டியிருக்கிறது!

உழவர்களுக்கு விழிப்பும் விவேகமும், வீரமும் ஊட்டுவது, தீ வைக்கும் காரியத்தைவிட நல்ல வேலைதான் — செய்யட்டும்!

தமிழ்நாட்டில் இருபதாண்டுக் காலம் எதிர்க் கட்சிக்கு ஆள வாய்ப்பில்லாமல் ஒரே கட்சி ஆட்சிபுரிய முடிந்ததென்றால், அதற்குக் காரணம், அரசியல் சட்டம்தான்!

நல்ல நடவடிக்கைகள் எடுத்தாலும், நிறைவேறாமல் போவதற்குக் காரணம் அரசியல் அமைப்புச் சட்டம்தான்!

தேர்தல் பிரகடனத்தில் ஒரு கட்சி தனது ஆசையை, மக்களின் தேவையை முன்னிட்டு அறிவிக்கிறது; அந்தக் கட்சி ஆட்சிக்கும் வருகிறது; ஆனால் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் காரியங்கள் நடந்தாக வேண்டும். அப்படி நடக்கும்போது, ஒவ்வொரு கட்டத்திலும் தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது!

மக்களுக்குத் தெரியவேண்டும்!

படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசு பொருள் உதவி செய்ய வேண்டுமென்று மாநில அரசு கேட்கிறது. இதிலே இருக்கிற உண்மை, மக்களுக்குப் புரிவதில்லை!

செய்யவில்லையென்றால், 'ஏன் செய்யவில்லை' என்று மாநில அரசைத்தான் மக்கள் கேட்கிறார்கள்!

இந்த உண்மைகளையெல்லாம் மக்களிடத்திலே தெளிவுபட எடுத்துச் சொல்லத் தமிழரசுக் கழகம் பிரசாரப் படையையே துவக்க இருக்கிறது.

மீண்டும் வற்புறுத்துகிறேன்!

நான் பலமுறை வற்புறுத்திவருவதையே மீண்டும் சொல்கிறேன். பாதுகாப்பு—க்குபோவரத்து — அயல்நாட்டுறவு தவிர்த்த மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களுக்குப் பிரித்து அளிக்கப்பட வேண்டும்.

காங்கிரசுக் கட்சி தனது தேர்தல் பிரகடனத்தில், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசிகளைக் குறைக்கத் திட்டமிட்டுக் காரியமாற்றுவோம்' என்று அறிவித்தது: இப்போது விலைவாசிகள் குறைந்திருப்பதைக் கண்டதும், 'விலைவாசிகள் குறைந்துவிட்டால் நாடு என்ன ஆகும்; குறையலாமா? விவசாயிகள் பாதிக்கப்படுவார்களே' என்று காமராசர் பேசுகிறார்!

இதென்ன முரண்பாடு? 'விலைகள் குறையலாமா?' என்கிறார் காமராசர்! என்ன தேச பக்தி இது?

பிறந்த நாள் செய்தி இது!

தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத் தமிழகத்தில் காங்கிரசு ஆட்சிக்கு எதிராகக் கூட்டணியோடு துணைநின்ற நானும், எனது கட்சியும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கிடைத்திட மத்திய அரசை எதிர்த்துப் போராடவும் எதிர்க் கட்சிகளுடன் து[illegible] நின்று உழைப்போம் என்ப[illegible] எனது பிறந்த நாள் செய்தியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்."

தாழ்த்தப்பட்டோருக்கு தொழிலுதவி

வட்டியில்லாக் கடன் வழங்க அரசுத் திட்டம்

வேலூர், ஜூன் 29—

தாழ்த்தப்பட்ட மக்கள் சிறு தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டமொன்றைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதன்படி, தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட ஆதித்திராவிட மக்கள் தொழில் நடத்துவதற்காக ரூ. 1-இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தேநீர்க் கடை, சிறிய ஓட்டல், வாடகை சைக்கிள் கடை, வெற்றிலைப் பாக்குக் கடை, அச்சகம், மின்சாரச் சாமான்கள் கடை போன்ற தொழில்களைத் தொடங்கினால் அதற்கு வட்டியில்லாமல் அரசு கடன் வழங்கும்.

தொழிலின் தன்மைக்கு ஏற்றவாறு ஆயிரம் ரூபாய் முதல் ஐயாயிரம் ரூபாய்வரை கடனாக வழங்கப்படும்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அண்ணா உறுதிமொழி

மதுரையில் மறியல் நின்றது

மதுரை, ஜூன் 28

கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாவட்ட மட்டத்தில் மட்டுமன்றி மாநில மட்டத்திலும் குழு ஒன்றை விரைவில் அமைப்பதாக முதலமைச்சர் அண்ணா அவர்கள், கைத்தறி நெசவாளர் பிரதிநிதிகளிடம் உறுதிமொழி அளித்தார்

தென்காசிக்குச் சென்ற அண்ணா அவர்களை கைத்தறி நெசவாளர் பிரதிநிதிகள், மதுரை இரயில் நிலையத்தில் சந்தித்துத் தங்கள் குறைகளைத் தெரிவித்தனர்.

கடந்த 8-நாட்களாக மதுரையில் நடந்த கைத்தறி நெசவாளர் மறியல் அறப்போர், அண்ணா அவர்களின் யோசனைக்கேற்ப கைவிடப்பட்டது.

இதுவரை மறியல் செய்து கைதான 650 பேர்களும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.

கைத்தறி நெசவாளர் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காணுவதற்காக மாநில மட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் குழுவில் அரசுப் பிரதிநிதிகளும், கைத்தறி நெசவாளர் பிரதிநிதிகளும் இடம் பெறுவர்.

இலங்கை அகதிகளுக்கு மறு வாழ்வு

புதுடில்லி, ஜூன் 29—

இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களைக் குடியமர்த்துவதற்காக நீலகிரியில் புதிய தேயிலைத் தோட்டங்களை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

சுமார் 3,750 ஏக்கர் நிலப் பரப்பைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

சுமார் ரூ. 93 இலட்சம் செலவில் முதல் தேயிலைத் தோட்டம் 750 ஏக்கரில் நிறுவப்படும்.

தேயிலைத் தோட்டங்களுடன் ரப்பர் தோட்டங்களும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

ரப்பர்த் தோட்டங்களை நிறுவுவதற்கான [illegible] மைசூரில் தென் கன்னடத்திலும், அந்தமான் — நிகோபார் தீவுகளில் கட்சாலிலும் துவக்கப்பட்டு விட்டன. மேற்கொண்டு ரப்பர் தோட்டங்கள் பின்னர் நிறுவப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது.

பார்லர் அரங்கம்

ஜூன் 30-ந்தேதி மாலை 2-மணி, 4-15 மணிக்கு

'சர்க்கஸ் கடல் மீன்'

(எம்.ஜி.எம். படம்)

காங்கிரசார் வீசிய கல்

தேர்தல் நிதிக்கு ரூ. 100 ஈட்டித் தந்தது

மேலகரம், ஜூன் 28—

இன்று, சழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள், தென்காசித் தொகுதியிலுள்ள வடகரை மேலகரம் கூட்டத்தில் பேசினார்.

கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அவர் செல்லுமுன், மேலகரத்தில், சிவகங்கை சேதுராசன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

அந்நிகழ்ச்சியின்போது, மேடையை நோக்கி காங்கிரசுக் காலிகள் கல்வீச்சு நடத்தினர்.

இந்தக் கல்வீச்சினால், முருகன் என்ற சிறுவன் காயமடைந்தான்.

கருணாநிதி அவர்கள் கூட்டத்திற்கு வந்ததும், வீசப்பட்ட கல்லை ஏலம் விட்டார்; கருப்பையா என்ற தோழர், நூறு ரூபாய் கொடுத்து அதை ஏலத்தில் எடுத்தார்.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

சென்னை—திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் 24-ஆம் ஆண்டுத் தமிழ் வகுப்புகள் தொடக்க விழா, 1—7—68 மாலை 6-30 மணிக்கு, மண்ணடி ஏ. ஆர். சி. மகளிர் உயர்நிலைப் பள்ளியில் திரு. மா. கி தசரதன் எம்.ஏ. தலைமையில் நடைபெறும்; திரு. க. அறிவழகன் எம்.ஏ., எம்.எல்.சி., வகுப்பினைத் துவக்கிவைப்பார்.

திருவள்ளுவர் விழா

சென்னை மணவழகர் மன்ற நக்கீரர்பட்டி மனறச் சார்பில், திருவள்ளுவர் விழா; 30—6—68 மாலை 6 30 மணிக்கு, பெத்து நாயக்கன் பேட்டை — முருகேச முதலி தெரு, 2-எண்ணுள்ள இல்லத்தில்; தலைவர்: அரவவளவன்; பேசுவோர்: மே. வீ. வேணுகோபால், ஒளவை துரை. நடராசன், என். வி. என். சோமு, அன்புக்கண்ணன்.

(4-ம் பத்தி தொடர்ச்சி)

கமிஷனில் சரிசெய்யப்படும்.

எனினும், பழைய மணியார்டர் பாரங்களை மூன்று மாத காலத்திற்குள்—அதாவது, செப். 30-ம் நாளுக்குள் பயன்படுத்திக் சொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கொள்ளையோ கொள்ளை--கோடிக்கணக்கில் காங்கிரசார் அடிக்கும் கொள்ளை!

ஆதாரத்துடன் கூறுகிறார் அவர்கள் தலைவர்!

பெங்களூர், ஜூன் 29 —

"காங்கிரசுக்காரர்கள், பதவிக்கு வருவதற்கு எதையும் செய்கிறார்கள்! விரும்பத்தகாத செயல்களைச் செய்கிறார்கள்! பதவிக்கு வந்த பிறகு மக்களை மறந்துவிடுகிறார்கள்! இது தான் காங்கிரசின் செல்வாக்கு குறைந்து வருவதற்கு முக்கிய காரணமாகும்!

"காங்கிரசு அரசுகள் மீது ஏராளமான புகார்கள் வருகின்றன; சில காங்கிரசுக்காரர்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, கோடிக்கணக்கான பணம் சேர்த்ததாகப் புகார்கள் வந்துள்ளன! இதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன!

"டெல்லியில்கூட காங்கிரசுக் கட்சி போதுமான பலத்துடன் ஆட்சி செய்யவில்லை! மைசூர் மாநிலத்தில்கூட, 35 காங்கிரசு உறுப்பி[illegible] கட்சி மாறி[illegible] ஆட்சி கவிழ்ந்துவிடும்!"

[illegible]சலிங்கப்பா

([illegible]த் தலைவர்)

7-7-6[illegible]

பட்டுக்கோட்[illegible] நகர தி. மு. க. தேர்தல்

ஆணையாளர்

இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ.

பட்டுக்கோட்டை நகர தி.மு.க. கிளைத் தேர்தல், 7-7-68 ஞாயிறு காலை 10-மணிக்கு, தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் திரு. இரெ. இளம்வழுதி எம். ஏ. பி. எல்., எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

[illegible]த் தாள் [illegible] கூடுகிறது!

புதுடில்லி, ஜூன் 29—

இதுவரையில மூன்று காசுக்கு விற்கப்பட்டுவந்த பண விடைத் தாள் (மணியார்டர் பாரம்), ஜூலை 1-ஆம் நாள் முதல் ஐந்து காசாக உயருகிறது!

இந்தப் பண விடைத்தாள், முன்பெல்லாம் இலவசமாகத் தரப்பட்டு வந்தன; காரணம் ஒன்று கூறி சிறிது காலத்திற்கு முன்னர், அதற்கு மூன்று காசு விலை வைக்கப்பட்டிருந்தது; இப்பொழுது அந்த விலையும் கூடுகிறது.

ஜூலை 1-ஆம் நாளுக்கு முன்னதாக வழங்கப்பட்டுள்ள பண விடைத் தாள்கள், அஞ்சல் அலுவலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்; கூடுதல் காசு மணியார்டர்

(2-ம் பத்தி பார்க்க)

வாழ்த்தும் நெஞ்சங்கள் பல இலட்சம்!

தென்காசி, ஜூன் 29—

"புன்செய் நிலத்திற்கு வரியை நீக்கியதால் 45 இலட்சம் மக்கள் அறிஞர் அண்ணா அவர்களை வாழ்த்துகிறார்கள்!

"ஓர் ஏக்கருக்குக் குறைந்த அளவு நிலம் உடைய ஏழை விவசாயிகளுக்குக் கொள் முதலிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதால்--அதனால் பலன் பெற்ற பதின்மூன்று இலட்சம் ஏழை விவசாயிகள் அறிஞர் அண்ணாவை வாழ்த்துகிறார்கள்!

"ஐம்பாயிரம் ஆசிரியர் குடும்பங்கள், பேரறிஞர் அண்ணாவுக்கு தங்கள் இதயம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

"பஸ் கட்டணத்தைக் குறைத்ததால், ஏழை எளிய மக்கள் அமைச்சர் கருணாநிதியை வாழ்த்துகிறார்கள்!

"இவைகளையெல்லாம் கண்[illegible] மனம் பொறுத காங்கி[illegible] [illegible]ரர்களுக்குப் பு[illegible] கொண்டு வருகிறது! அத[illegible] அவர்கள், ஏதேதோ பேசி வருகிறார்கள்! மக்கள் இவர்களை நம்பப் போவதில்லை!"

--மதுரை எஸ். முத்து

(தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) [illegible]